## செய்தி வெளியீடு

### மேம்பட்ட வழித்தடங்கள் உருவாக்கல்

*நகர்ப்புற வழித்தடம்–பயன்பாடு மற்றும் இணைய தடம் மீதான கருத்தாய்வு*

பொருளாதாரா வளர்ச்சி மற்றும் இணக்கமான சமூக வளர்ச்சிக்கு நகரங்களின் வழிதடங்கள் மிக அவசியமானது. இந்திய அளவில் தமிழகத்தில் 9.3 % மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். தமிழகத்தில் நகரமயமாக்கல் படிப்படியாக உயர்ந்து, தற்போது அது மேம்பட்டு உருவெடுத்துள்ளது.

மேம்பட்ட நகர குடியிருப்புகளுக்கான நேரடி வழித்தடங்களின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. தேவைகேற்ப போதுமான போக்குவரத்துத் திறன் இல்லாமையால் நகரங்களில் மக்கள் கூட்டம் மற்றும் நெருக்கடி காணப்படுகிறது.

**எதிர்கொள்ளும் சவால்கள் :**

அபரிதமான பொருளாதார வளர்ச்சிக்கேற்ற போதுமான போக்குவரத்துத் திறன் இல்லாமையால் தனியார் மகிழுந்து எண்ணிக்கையில் உயர்ந்துள்ளது. மாநகரங்களின் இதர போக்குவரத்துக்களான மெட்ரோ ரயில், உள்ளூர் ரயில் சேவைகளுடன் அதிக எண்ணிக்கையிலான ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை கார்கள் சேர்ந்து வாகன நெரிசலை ஏற்படுத்தி வருகிறது. மேம்பட்ட வழித்தடங்கள் மற்றும் சிறந்த போக்குவரத்து முறை நகர்ப்புற வழித்தடங்களின் குறைகளை நிறைவு செய்து, மீட்டு வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

இது தொடர்பாக ‘‘நகர்ப்புற வழித்தடம்–பயன்பாடு மற்றும் இணைய தடம்’’ குறித்த கருத்தாய்வு மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு சி. பொன்னையன் அவர்கள் தலைமையில், 9 டிசம்பர் 2020 அன்று, காலை 11.00 மணிக்கு, மனிதவள மேம்பாட்டு காணொளி அரங்கம், எழிலகம், சென்னை – 5 இல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் திரு அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள், திரு பி. பிரபாகர், இ.ஆ.ப., அரசு துணைச் செயலர், போக்குவரத்துத் துறை, ஸ்மார்ட் சிட்டி மிஷனின் தலைமை நிர்வாக அதிகாரி, திரு ராஜ்

செருபல் அவர்கள், துறைசார் உயர் அலுவலர்கள், வல்லுநர்கள் காணொளி கருத்தாய்வில் பங்கேற்றனர்.

**மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு சி. பொன்னையன் அவர்கள் பதிவு செய்த கருத்துக்கள் :**

இக்கருத்தாய்வில் பல்வகையான மேம்படுத்தப்பட்ட பொது போக்குவரத்து முறைகளான பாதசாரி, மிதிவண்டி, பொது மற்றும் தனியார் போக்குவரத்தை பின்பற்ற வலியுறுத்தினார். பொது போக்குவரத்து காலத்திற்கு ஏற்ப குறைந்த கட்டணத்தில் வசதி உடையதாகவும் மற்றும் எல்லா மக்களும் தெரிவு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

புதிதாக வரவிருக்கும் மாநில நகர்ப்புற போக்குவரத்துக் கொள்கை நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற, பொது போக்குவரத்து விரிவாக்கத்திற்கு அடிகோலிடும் எனக் கூறினார்.

மகிழுந்துக்களுக்கான பல்லடுக்கு வாகன நிறுத்தம் மற்றும் அதன் மேலாண்மை, நகர்ப்புற இடப் பயன்பாட்டின் மேலாண்மை, வாகனங்களை தெருக்களிலும் மற்றும் கிடைத்த இடத்திலும் நிறுத்தி வைப்பதை, தவிர்ப்பதற்கு சிறந்த வழி ஆகும்.

மின் பேருந்துகளை அறிமுகம் செய்வதன் மூலம் மாசு, காலநிலை மாற்றம் தவிர்த்தல் மற்றும் குடிமக்களின் உடல்நலக் கேடு ஆகியவற்றில் நன்மை பயக்கும்.

தமிழகத்தில் பெருநகரமான சென்னை, மதுரை, திருச்சி, கோவையில் – வானாளாவிய வழித்தடங்கள் (Skyway Corridor) அறிமுகம் செய்வதன் மூலம் வேகமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து, குறைந்த பயண நேரம், குறைவான எரிபொருள் பயன்பாடு மற்றும் வாகன நெரிசல் போன்ற நன்மைகளுக்கு வழிவகுக்கும். மேலும், விபத்துக்களை வானாளாவிய வழித்தடங்கள் குறைக்கும்.

தனது நிறை உரையில், நகர்ப்புறத் திட்டங்களான காலத்திற்கு ஏற்ற ஒருங்கிணைந்த போக்குவரத்து கட்டமைப்பு, சுற்றுச்சூழலை பாதுகாத்து, நகரங்களில் நல்ல வழித்தடங்கள் கொண்டதாக மாற்றுவதற்கு சிறந்த நகர்ப்புற உத்தியாகும்.

உறுப்பினர் செயலர்
மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**